[1996 ஆகஸ்ட் 21

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், சில ஆசிரியர்கள் எழுதிய பழைய பாடங்கள் திரும்ப வருகின்ற போது, சில எழுத்துக்கள் மாற்றியமைக்கப்படாமல் விடப்பட்டிருக்கின்றன. அது பரிசீலிக்கப்பட்டு முறைப்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண் 185, திரு. கு. ரவி அருணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்

**185—**

**பொது நூலகம் அமைத்தல்**

***247–திரு. கு. ரவி அருணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்காசி தொகுதி, செங்கோட்டை வட்டம், கட்டளைக்குடியிருப்பு, தென்காசி ஒன்றியம், ஆயிரப்பேரி கிராமம், பாட்டப்பத்து ஆகிய இடங்களில் பொது நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே

இந்தக் கிராமங்களில் முழுநேர நூலகம் அமைக்க தற்சமயம் தகுந்த வழியில்லை, இருப்பினும் இந்தக் கிராம மக்கள் திருநெல்வேலி மாவட்ட நூலக அலுவலருடன் தொடர்பு கொண்டு பகுதி நேர நூலகம் திறப்பதற்குத் தேவையான முன் நிபந்தனைகளை அந்தக் கிராமங்களில் பூர்த்தி செய்து தர முன்வருவார்களேயானால் உடனடியாக அந்தக் கிராமங்களில் பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கோட்டையிலுள்ள பொது நூலகத்தில் கடந்த இரண்டு மாத காலமாக நூலகர் இல்லாத காரணத்தால், நூலகம் மூடிக் கிடக்கிறது. அங்கே நூலகரை உடனடியாக நியமித்து அந்த நூலகம் இயங்கச் செய்வதாக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அமைக்கப்பட்டு, நடைபெற்று வந்த நூலகங்கள் தற்போது இயங்காமல் இருக்குமேயானால், அது உடனடியாகக் கவனிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 21]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. அ. மாரிமுத்து.

**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வானூர் தொகுதியில் வானூர் தலைமையிடத்தில் நூலகம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதியாண்டில் அந்த நூலகம் திறக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முயற்சி மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டிடங்களில் இயங்கிவரும் நூலகங்களுக்கு, சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கென அறிவிக்கப்பட்ட இடங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கு இவ்வாண்டு அரசிடம் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூலகத் துறைக்குக் கிடைக்கின்ற நிதியின் மூலம், ஆண்டுக்கு சில நூலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவது என்ற முறையில், ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. அந்த முறையில் உரிய காலத்தில் இது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நூலகங்களுக்கு ரூ. 10,000/- நன்கொடை வழங்கினால் அவர்களுக்குப் புரவலர் பட்டம் ஏற்கெனவே வழங்கப்பட்டது. மீண்டும் அந்தத் திட்டத்தை அமல்படுத்தி நன்கொடை பெற ஆவன செய்யப்படுமா என்பதையும், நூலகர்கள் இல்லாத நூல்நிலையங்களில் உடனடியாக நூலகர்கள் நியமிக்கப்படுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த முறைப்படி, ஆயிரம் ரூபாய் நன்கொடை வழங்குவார்களேயானால், புரவலர் என்று அந்த நூலகத்திற்காக ஏற்றுக் கொள்ளப்படுகிற முறை இருக்கிறது. புதிய கிளை நூலகங்கள் அல்லது பகுதி நேர நூலகங்கள் திறக்கப்படவேண்டுமானால், அதற்கு இத்தகைய புரவலர்கள் இருவர் சேர்ந்து உறுப்பினர்களைச் சேர்த்து அதை உருவாக்க வேண்டும். அதேபோல நூலகர் இல்லாத நூலகங்களுக்கு

நூலகர்களை நியமிப்பதில் சில தடை இருக்கிறது. அதை மாற்றி, உரிய முறையில் நூலகர்களை நியமிக்க முயற்சிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண் 186, திரு இ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**186—**

### மின் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை

***363--திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம், சமுத்திரம் ஆகிய கிராமங்களில் மின் வெட்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மின் பற்றாக்குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டின் எப்பகுதியிலும் மின்வெட்டு இல்லை. இருப்பினும், மின்விநியோகத்தில் சில கட்டுப்பாடுகள் உள்ளன.

(ஆ) மின்கட்டமைப்பின் (Grid) நிலையினைக் கருத்திற்கொண்டு தமிழ்நாட்டில் உள்ள மின்பாதைகளில் வழங்கப்பட்டு வரும் மின் விநியோகம் கட்டுப்பாடு செய்யப்பட்டு வருகின்றது. இந்தக் கட்டுப்பாடு தமிழகத்தில் மின் உற்பத்தி நிலைமை சீரானவுடன் விலக்கப்பட்டுவிடும்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எடப்பாடி தொகுதியிலுள்ள புதுப்பாளையம், சமுத்திரம் ஆகிய கிராமங்களில் அடிக்கடி மின் அழுத்தக் குறைவு ஏற்படுவதால், மின்சார மோட்டார்கள் விரைவிலே பழுதடைந்து விடுகின்றன. 'காயில்' தீப்பற்றி எறிந்து விடுகிறது. இவற்றைச் சரிசெய்ய அங்குள்ள ஏழை விவசாயிகள் 4 ஆயிரம் ரூபாய் முதல் 5 ஆயிரம் ரூபாய் வரை செலவு